# Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, CHENGLAPATTU

(சாட்சிக்கு திரு.E.ஜெயவேல், தலைமை எழுத்தர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

| | | |
|---|---|---|
| Sessions | : | SC.No.304/2025 |
| Deposition of Witness for | : | PW.1 |
| Name | : | திரு.ஜெயகுமார் |
| Father's Name | : | திரு.தேவசகாயம் |
| Taluk/Address | : | கோவில் பதாகை, ஆவடி மெயின் ரோடு |
| Age | : | 46 |
| Date | : | 07.04.2026. |

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசிக்கிறேன். நான் நிலம் வாங்கி, விற்கும் தொழில் செய்கிறேன். கடந்த 14.03.2025ம் தேதி நானும், எனது மகன் பிரைசன் மெராக்கிள் என்பவரும் காலை 11.45 மணிக்கு என்னுடைய அலுவலகத்திற்கு செல்வதற்காக என்னுடைய பொலிரோ காரில் குரோம்பேட்டை அருகில் வந்தோம். நான் அங்கு சென்றவுடன் எனது நண்பர் வசந்த் என்பவரின் காரில் சென்றுவிட்டேன். உடனே என் மகன் எனக்கு போன் செய்தார். நான் எடுக்கவில்லை. என்னை காணாததால் என்னுடைய மகன் போலீஸ் அவசர எண்.100க்கு போன் செய்துவிட்டார். பிறகு குரோம்பேட்டை காவல் நிலையத்தில் இருந்து எனக்கு அழைப்பு வந்தது. அங்கு என்னை விசாரித்து புகார் கொடுக்க சொன்னார்கள். அங்கேயும் புகாரில் தற்போது சொன்னவாறு எழுதி கொடுத்தேன். என் முன் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1. அந்த புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் தெரியாது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் என்னை கடத்தி கொண்டு செல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் அனைவரும் வியாபாரம் சம்பந்தமாக அவசரமாக காரில் சென்றதை என் மகன் தவறாக எண்ணி

காவல் துறைக்கு போன் செய்துவிட்டார். காவல் நிலையத்தில் வெற்று தாளில் தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

**Deposition of Witness**
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT,
CHENGLAPATTU

(சாட்சிக்கு திரு.E.ஜெயவேல், தலைமை எழுத்தர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

| | | |
|---|---|---|
| Sessions | : | SC.No.304/2025 |
| Deposition of Witness for | : | PW.2 |
| Name | : | திரு.பிரைசன் மிராக்கிள் |
| Father's Name | : | திரு.ஜெயக்குமார் |
| Taluk/Address | : | எண்.19, ஈஸ்வரி அவன்யூ, கோவில் பதாகை, ஆவடி, சென்னை |
| Age | : | 23 |
| Date | : | 07.04.2026. |

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசிக்கிறேன். நான் நிலம் வாங்கி, விற்கும் தொழில் செய்து வருகிறேன். என்னுடைய சொந்த ஊர் ராணிப்பேட்டை, அரக்கோணம். அ.சா.1 என் தகப்பனார். கடந்த 14.03.2025ம் தேதி காலை 11.45 மணிக்கு நானும், என் தகப்பனாரும் என் தகப்பனாரின் அலுவலகத்திற்கு பொலிரோ காரில் சென்று குரோம்பேட்டை GST ரோட்டில் நிறத்தினோம். என் தகப்பனார் காரில் இருந்து இறங்கி சென்றுவிட்டார். நான் உடனே என் தகப்பனாருக்கு போன் செய்தேன். அவர் போனை எடுக்கவில்லை. நான் பயந்து போய் போலீஸ் அவசர எண்.100க்கு போன் செய்தேன். ஒரு மணி நேரம் கழித்து என் தகப்பனார் எனது கைபேசியில் பேசினார். பின்னர் குரோம்பேட்டை காவல் நிலையத்தில் இருந்து போலீசார் எனக்கு போன் செய்தார்கள். அங்கு என் தகப்பனார் புகார் கொடுத்தார். இந்த வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் தெரியாது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என் தகப்பனாரை யாரும் கடத்திக் கொண்டு செல்லவில்லை, வியாபாரம் சம்பந்தமாக அவசரமாக வெளியில் சென்றேன் என்று எனது தகப்பனார் பின்னிட்டு என்னிடம் தெரிவித்தார். காவல் நிலையத்தில் என் தகப்பனார் வெற்று தாளில் ஒரு கையொப்பம் மட்டும் தான் போட்டார்.

நான் தவறுதலாக அவசர எண்.100க்கு போன் செய்ததால் இந்த பிரச்சனை ஏற்பட்டது. என் தகப்பனாரை யாரும் கடத்தி கொண்டு செல்லவில்லை, நல்லபடியாக தான் வந்தார் என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை